## சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## OS.No. 409/2023

**02.09.2025**

P.W.1 - ஆல்பின்ராஜ்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

4 தவணைகளாக கல்வி கடன் 1ம் பிரதிவாதிக்கு கடன் வழங்கப்பட்டது, 2ம் பிரதிவாதி மேற்படி கடனுக்கு உத்தரவாதம் கொடுத்தார். எந்த தேதியில் வழங்கப்பட்டது என்றால் தேதி ஞாபகமில்லை. 1ம் பிரதிவாதி படிக்கும் கல்லூரிக்கு டிடி மூலம் செலுத்தப்பட்டது. மேற்படி விபரம் வா.சா.ஆ.5 வங்கி கணக்கு விபர பட்டியலில் அடங்கும். மேற்படி கல்வி கடனுக்கு 13 சதவீத வட்டி என்றால் சரிதான். 2013 வருடம் முதல் கடனை திருப்பி செலுத்துவதாகவும், ஒப்பு கொண்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கொண்டு கடன் எதுவும் கட்டவில்லை என்றால் சரிதான். கடனை செலுத்தவில்லை என்பதற்கான வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பபட்டதா என்றால், வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை. வங்கி மூலம் 3 மாதத்திற்கு ஒருமுறை தவணை அறவிப்பு அனுப்பப்பட்டது. அவ்வாறு தவணை அறிவிப்புக்கான நகல்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் . 2013 ல் கடன் காலக்கெடு முடியும் போது 2016 ல் வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல, 2019 வருடம் வரை காலவரம்பு உள்ளது. ஒப்பந்த படி 2019 வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தம் வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு ஒப்பந்தத்தில் குறிப்பு ஏதும் இல்லை என்றால் சரியல்ல. 2016 ல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் கால வரம்பு சட்டத்தால் பாதிப்பு அடைந்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.09.02 16:12:57 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.